2011 ஜனவரி 10]

செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், கூடுதலாக தொகை அளிக்க வேண்டும் என்பதற்காக மத்திய அரசாங்கம் 50 ரூபாய் ஊக்கத் தொகை அளித்தது. அது போதாது என்கிற காரணத்தினால்தான் தமிழக முதல்வர் மாண்புமிகு அண்ணன் கலைஞர் அவர்கள் மாநில அரசின் சார்பாக சாதா ரகத்திற்கு 50 ரூபாயும், சன்ன ரகத்திற்கு 70 ரூபாயும் ஊக்கத் தொகையாக அளித்ததன் வாயிலாகத்தான், இப்பொழுது 1,050 ரூபாய், 1,100 ரூபாய் என்று கிடைக்கிறது. இந்த ஆண்டு தொடர்ந்து அந்த 50 ரூபாய், 70 ரூபாய் என்பதைக் கொடுக்க வேண்டும் என்றுதான் முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே, அது தொடர்ந்து கிடைக்கும். மேலும் கிடைக்குமா என்று கேட்கிறார்கள். ஆக, நெல்லினுடைய விலை அதிகமாக ஆக அரிசியினுடைய விலையும் அதிகமாகும் என்பதும் அவருக்குத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

7—

ஒலி, ஒளிக் காட்சி

***62335—திரு. என். மாலைராஜா:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருள்மிகு நெல்லையப்பர்-காந்திமதி அம்பாள் திருக்கோயில் ஆயிரங்கால் மண்டபத்தில், ஒலி, ஒளிக் காட்சி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர்-காந்திமதி அம்பாள் திருக்கோயிலில் ஆயிரங்கால் மண்டபத்தில் ஒலி, ஒளிக் காட்சி அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

திரு. என். மாலைராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியினுடைய மையப் பகுதியில்

அமைந்துள்ளது அருள்மிகு நெல்லையப்பர் உடனுறை காந்திமதி அம்பாள் திருக்கோயில். இது தமிழகத்திலேயே நிலப் பரப்பில் இரண்டாவது பெரிய கோயிலாகும். அப்படிப்பட்ட கோயிலில் தினமும் 3 ஆயிரம் பக்தர்கள் வந்து செல்கிறார்கள். விழாக் காலங்களில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் வந்து செல்கிறார்கள். நெல்லை மாவட்ட மக்களின் நீண்டகால கோரிக்கையான அந்த ஆயிரங்கால் மண்டபத்தில் ஒலி, ஒளிக் காட்சி அமைக்கின்ற அந்தத் திட்டம் ஏற்கெனவே நம்முடைய நாயக்கர் மகாலில் அமைத்த அந்த ஒப்பந்தக்காரர்கள் வருகை தந்து நெல்லையப்பர் கோயிலில் அதைப் பார்த்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். இட வசதி போதாது என்ற காரணத்தால் அது முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, இதை மறுபரிசிலனை செய்ய வேண்டும். நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய பொற்கால ஆட்சியில் அர்ச்சகர்களுக்கு நல வாரியம் அமைத்து, அவர்களுக்கு சைக்கிள் வழங்கியது போன்ற திட்டங்கள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இந்தக் காலகட்டத்தில் மீண்டும் இதை மறுபரிசிலனை செய்து அங்கு ஒலி, ஒளிக் காட்சி அமைக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரப்பெற்ற கோரிக்கையின் அடிப்படையில்தான் அங்கு அந்த ஒலி, ஒளிக் காட்சி அமைப்பதற்கான சூழ்நிலைகள் இருக்கின்றனவா என்று கண்டறிய தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்ட நிபுணர் குழுவை அனுப்பி இருந்தோம். ஆனால், அந்த நிபுணர் குழுவினர் சென்று அந்த ஆயிரங்கால் மண்டபத்தில் இருக்கக்கூடிய தூண்கள் மிக நெருக்கமாக இருக்கின்ற காரணத்தாலே ஒலி, ஒளிக் காட்சி அமைப்பதற்கு ஏதுவான சூழ்நிலை அங்கே இல்லை என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, எதிர்காலத்திலும் அதை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா.

2011 ஜனவரி 10]

திரு. என். மாலைராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லையப்பர் கோயிலில் தெப்பக்குளத்தைத் தூர் வாரி, தண்ணீர் பெருக்கவும் அங்கு கலையரங்கத்திற்கு முன்பு பார்வையாளர்கள் அமர்வதற்கு மேற்கூரை அமைத்துத் தருவதற்கும் நம்முடைய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பிறகு, திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் நடைபெறுவதோடு, முதலமைச்சர் அவர்கள், திருக்கோயில்களுக்கு வந்து செல்லக்கூடிய பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்து திருக்கோயில்களிலும் அதுபோன்ற பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தத் திருக்குளமும், குறிப்பாக, நீர்நிலை ஆதாரத்தை முன்னிறுத்துகின்ற வகையில் இருக்கின்ற காரணத்தாலே நிச்சயமாக அது தூர் வாரி செப்பனிடப்படும். இதர பணிகள் பற்றியும் உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினால் அவற்றையும் தாராளமாகச் செய்து தரலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன்.

திருமதி ராணி வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளம் தொகுதி ஆழ்வார்திருநகரி ஒன்றியத்திலுள்ள ஆதிநாதர் கோயில் பாடல் பெற்ற ஸ்தலம். இது நவதிருப்பதிகளில் ஒன்றாக விளங்குகிறது. சுற்றுலாத் தலமாகவும் விளங்கிக்கொண்டிருக்கிறது. இந்தக் கோயிலில் ஒலி, ஒளிக் காட்சி அமைத்துத் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

அதோடு அந்தக் கோயிலில் உள்ள குளம் விழாக்காலங்களில் தூர் வாரப்பப்பட வேண்டும், தனியார் மூலமாகத்தான் அந்தக் குளத்தில் தண்ணீர் நிரப்பப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர்

அவர்கள் அந்தக் குளத்திற்கு தண்ணீர் நிரப்பித் தருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசிலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரத்திலே அமைந்திருக்கின்ற உலகப் புகழ்மிக்க நடராசர் திருக்கோயில் பல நூற்றாண்டுக் காலமாக தனியாரின் ஆதிக்கத்தில் இருந்து வந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை மீட்டு இன்றைக்கு அரசினுடைய கட்டுப்பாட்டில் கொண்டு வந்து ஒரு வரலாற்றுச் சாதனையை நிகழ்த்தியிருக்கின்றார்கள். அந்தத் திருக்கோயிலில் இப்போது பக்தர்களுடைய எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. குறிப்பாக அயல் நாடுகளிலிருந்து வருகின்றவர்கள் அதிகரித்திருக்கின்றார்கள். இந்த நிலையில், அந்தக் கோயிலின் சிறப்பை அதிகப்படுத்தும் விதமாக அங்கே ஒலி, ஒளிக் காட்சி அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் அருள்மிகு நடராசர் திருக்கோயில் பற்றிய வழக்கு, அதாவது அங்கே இந்து சமய அறநிலையத் துறையின் சார்பாக ஒரு அலுவலரை நியமித்தது தவறு என்று சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால், இப்போது அந்த வழக்கில் நமக்குச் சாதகமாக தீர்ப்பு கிடைத்திருக்கின்றது. துறை அங்கே அலுவலரை நியிமித்தது சரிதான் என்று தீர்ப்பு வந்திருக்கிறது. அதன்பிறகு இப்பொழுது 50 இலட்சம் ரூபாய் செலவில், அங்கே அடிப்படை வசதிகள், மின் விளக்குகள், பக்தர்கள் வந்து செல்வதற்குத் தேவையான பாதை வசதிகள் எல்லாம்

ஏற்படுத்தப்பட்டு, அந்தத் திருக்கோயிலின் சூழ்நிலை இப்போது மேம்படுத்தப்பட்டிருக்கின்றது. உச்ச நீதிமன்றத்தில் அந்த வழக்கு இன்னும் நிலுவையில் இருக்கின்றது. தொடர்ந்து அங்கு தேவையான அனைத்து அடிப்ப இன்னும் அடிப்படை வசதிகளும் படிப்படியாகச் செய்து தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன், மாண்புமிகு பள்ளிக் கல்வி துறை அமைச்சர் அவர்கள்.

8—

தரம் உயர்த்துதல்

***130036—திரு. குத்தாலம் க. அன்பழகன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் தொகுதி, வழுவூர் ஊராட்சி, வேழமுறித்தான் பேட்டை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டே மேல்நிலைப் பள்ளியாக்கப்படுமா?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் தொகுதி, வழுவூர் ஊராட்சி, வேழமுறித்தான் பேட்டை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பல்வேறு பணிகளை எனது தொகுதியில், பள்ளிக் கல்வித் துறையில் நிறைவேற்றித் தந்துள்ளார்கள். அந்தப்